

Vol.28 | No. 01 | January 2024

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## Eparchial Bible Convention 2023 December 01,02,03 Kalluvilai









## Centenary celebrations of the establishment of the Syro Malabar Hierarchy, 2023 December 21 @ Padanthalumoodu



Catechesis, CML, & KII Departments
Christmas Celebration @ Sagamam, 09.12.2023



SMYM Christmas Celebration @ Soosaipuram, 10.12.2023



Christmas Celebration Heads of Institutions @ Sangamam 12.12.2023



Christmas Celebration @ Sychar Resource Centre, Kozhiporvilai, 12.12.2023



Christmas Celebration CRI members @ Kattathurai, 16.12.2023



Mathru Jyothis Christmas Celebration @ Kattathurai, 16.12.2023



Christmas Celebration @ Madurai 17.12.2023

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 28 No :01 JANUARY 2024



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Designed

**Merin Sujith**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைக்கல்வி | 07 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 12 |
| அருட்தந்தை ஜாண் தெக்கேல் | 13 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 15 |
| இல்வாழ்வு இயக்கம் | 17 |
| வின்சென்ட்-தே-பவுல் சபை | 19 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 21 |
| புலரி சமூக சேவை சங்கம் | 23 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 25 |
| மறைமாவட்ட செய்திகள் | 26 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 28 |
| மறைவட்ட செய்திகள் | 29 |
| MONTHLY AGENDA - JANUARY 2023 | 37 |
| BISHOP'S ENGAGEMENTS | 39 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/153/2023**
**31 December 2023**

**Dear Readers,**

Greetings from the Bishop's House, Thuckalay!

We are on the threshold of another year! The year 2023 is ebbing away from us, and the new year 2024 is beckoning us. As we thank the Lord for all the blessings that we received during the last year, let us enter the new year with great joy and optimism to carry on our ministries with much commitment and passion.

The year 2024 is significant for us as we are preparing to celebrate the great jubilee of our Lord Jesus Christ. I want to reflect with you on this event and invite you to make this year a preparation for the jubilee that we shall celebrate in 2025.

As we are all aware, etymologically, the word 'jubilee' comes from the Hebrew word 'yobel' (ram's horn), which was used as a trumpet to announce the beginning of the 50th year, that is, the completion of 49 years (7 times 7 years). According to Lev 25:8-13, the celebration of the jubilee year entails the release of slaves, forgiveness of debts, and repatriation of property.

In the Bible, jubilee is understood as the four **R**'s: **rest** (the land is given rest); **review** (an inventory of life, livestock, personnel, and land is taken); **restore** (setting the societal clock back to zero); and **reconcile** (aligning our relationships right with God and one another). The 'holy year' which the Prophet Isaiah (cf. Is 61:1ff; see also Lk 4:16ff) speaks of also alludes to jubilee. Here, the holy year is understood as the year of recalling and announcing God's favour and mercy.

From the biblical point of view, the celebration of a jubilee makes us reflect on the **past** (liberation), live in the **present** (consolation), and set our vision for the **future** (moving forward). Besides, jubilee is the celebration of time, and since it is the celebration of time, it is

a gift from God. That is why, in the Easter Vigil of the Latin Rite, we say, ‘All times belong to him and all ages.’

Pope Boniface VIII announced the first ordinary jubilee year (‘holy year’) in 1300. Initially, ordinary jubilee was celebrated once every 100 years; Pope Clement VI in 1343 began to celebrate it every 50 years; in 1470, Pope Paul II made it every 25 years. There have also been ‘extraordinary’ holy years: in 1933, Pope Pius XI celebrated the 1900th anniversary of the Redemption; in 2015, Pope Francis proclaimed the Extraordinary Jubilee Year of Mercy. The previous ordinary jubilee was the Great Jubilee 2000, for which we had three years of preparation: 1997 (with a focus on God the Son), 1998 (with a focus on God the Holy Spirit), and 1999 (with a focus on God the Father). Jubilee events entail entering the holy door, undertaking pilgrimages, obtaining indulgences, etc.

The Pontifical Council for the Promotion of the New Evangelisation, which coordinates the celebrations, spells out seven characteristics of the Jubilee: (i) Pilgrimage (journey, crossing of boundaries, going across the fields, with other journeying companions); (ii) Holy Door (powerful sign, four Roman Basilicas, Jesus is the Door, journey to the interior of a church); (iii) Reconciliation (placing God at the centre of our lives, restoration of social justice, confession); (iv) Prayer (being open to God’s presence and his offer of love); (v) Liturgy (public prayer of the Church, summit and font, opening of the door); (vi) Profession of faith (identity of the baptised person, Apostolic Creed, Nicene Creed); and (vii) Indulgences (experience of God’s mercy, offering up sufferings).

We can spell out the threefold purpose of the celebration of the jubilee. They include:

- To celebrate Jesus, the incarnate Son of the Father, through the power of the Holy Spirit. We commemorate his birth, life, teaching, ministry, passion, death, and resurrection. We make conscious and fruitful efforts ‘to know him more clearly, to love him more dearly, and to follow him more closely.’

- To celebrate the church, which is our mother and teacher. We renew our commitment to our Holy Catholic Church by owing our communion and contribution.

- To celebrate each one of us with unique gifts and charisms, vocations and ministries, lifestyles, and values.

The logo for Jubilee 2025 shows four figures in four colours, representing the entire humanity hailing from the four corners of the earth. They embrace each other in solidarity and fraternity. The figure at the front holds fast to the cross, which gives us hope. The rough waves under the figures represent the present context of the world, marked by turmoil and troubles. The lower part of the cross has been elongated and turned into the shape of an anchor, which is a symbol of hope. The image illustrates the pilgrim's journey not as an individual effort but as a collective enterprise. At the bottom of the logo lies the motto of the Jubilee Year 2025: 'Peregrinantes in Spem' ('Pilgrims of Hope').

Pope Francis, addressing a letter to Archbishop Rino Fisichella, chairman of the Pontifical Council for the Promotion of the New Evangelisation, in connection with preparations for the 2025 Jubilee year, stressed that at a time in history marked by lonely deaths, lockdowns, and restrictions imposed because of the COVID-19 pandemic, "we must fan the flame of hope that has been given [to] us and help everyone to gain new strength and certainty by looking to the future with an open spirit, a trusting heart, and far-sighted vision." Pope Francis has underscored the importance of hope in Christian life amidst uncertainties and hardships created by the pandemic and wars. The Jubilee 2025 is meant to celebrate God, the Church, and each of us. The post-pandemic war-hitting world today needs 'hope.'

**Learn, pray,** and **walk** are the three words that we need to remember as we journey together towards the celebration of the jubilee.

In the first year, we are asked to promote the study of the Four Constitutions of the Second Vatican Council: Sacrosanctum Concilium, Dei Verbum, Lumen Gentium, and Gaudium et Spes to understand the general themes of the Council and to explore Jesus, the Church, and our lives in the world today. The Dicastery of Evangelization has brought forth 35 booklets giving background information on the Second Vatican Council and the Four Constitutions.

In the second year, which is the year of prayer, we are called to pray with the Universal Church, in the local churches, for the entire humanity. We need to reflect on prayer in Christian life, sacraments,

sacramentals, pious practices, and popular devotions as well. The Dicastery has published nine notebooks on prayer.

On 24 November 2024, our Holy Father will open the Jubilee Door at St Peter's Basilica, Rome. In 2025, we are invited to walk the Jubilee Doors in Rome, make a pilgrimage to the Four Basilicas, and undertake similar pursuits. We are also invited to enter the doors of hope, lighting a ray of hope in prisons, homes for the elderly, the dying and the destitute, hospitals, migrants, the marginalised, etc. The Ordinary Jubilee 2025, an integral part of the synodal journey, invites us to be pilgrims of hope, givers of hope, and livers of hope.

However, in our Eparchy, we shall inaugurate the preparations for the celebration of the Jubilee 2025 on 31 December 2023. We shall organise it at the parish level. The Eparchy has formed a core committee consisting of four of our Fathers, namely, Fr Joshy (convenor), Fr Sathianesan, Fr Justin, and Fr Jimmy, to coordinate the entire celebrations. They have already drawn up a plan. In the coming six months, that is, from January 2024 to June 2024, we shall engage ourselves in the study of the four documents of Vatican II, and in the next six months, namely, July 2024 to December 2024, we shall devote ourselves to prayer. In 2025, we shall celebrate the jubilee as per the instructions given in the jubilee calendar prepared by the Dicastery of Evangelization. Along with this circular you will get the Jubilee calendar so that the departments can prepare in advance and concretize it within the scheduled time frame.

The great Jubilee 2025 invites us to 'remember' God, to review our relation to God and God's Church, and to 'restore' our relationships with God and God's people. The celebration of Jesus, the church, and us will only happen in the context of our synodal journey in communion, mission, and participation. Hence, reading and understanding the documents of the Synod on Synodality is crucial for a meaningful celebration of the jubilee.

Let us pray that the Ordinary Jubilee 2025 may strengthen the hope of all the members of the Church. As 'Pilgrims of Hope,' let us continue to build communion, promote participation, and deepen our commitment to the mission.

On the first Friday of the new year, we celebrate the feast of Mary, Mother of God. It is indeed a wonderful opportunity for all of us to entrust ourselves and the diocese to the maternal care and protection

of Mary as we begin the new year, which offers us opportunities to prepare meaningfully for the great jubilee. Let us make good use of this year to become more Christ-like and to bring his message to as many people as possible so that the invocation that is recited in the prayer Our Father may be realised: Thy kingdom come. On 06 January 2024 we celebrate the Feast of Denha, which means revelation or manifestation. the Church recalls the manifestation of Jesus which began with his baptism at Jordan. Jesus reveals Himself to the world; Father and the Holy Spirit witness to it: ‘This is my beloved Son, with whom I am well pleased’ (Mt. 3:7). The mystery of the Holy Trinity is revealed at His baptism. It is an important feast day and a day of obligation. From the Feast of Denha, for a week, Syro Malabar Church observes the mission week. ‘Know the mission and be a missionary’is the motto of the missionary week celebrations. In all our parishes and institutions, those concerned shall make best efforts to organize the mission week in a meaningful and effective way. May the mission week inspire us to follow the example of our Father in faith, St. Thomasthe apostle to proclaim the gospel and to share the compassionate love of Jesus through the acts of mercy.

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

---

## அருட்சகோதரி டோரேத்தி SH அவர்களின் மறைவு

தக்கலை மறைமாவட்டத்தில் சுமார் 53 பணியாற்றிய அருட்சகோதரி டோரேத்தி SH அவர்கள் 2023 டிசம்பர் 15 அன்று நித்திய வாழ்வை அடைந்தார். சகோதரி அவர்கள் ஆறுகாணி, அணைமுகம், பளுகல் மற்றும் முக்கூட்டுகல் ஆலயங்களில் இறைப்பணி செய்தவர். மேலும் வாறுதட்டு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியையாக பணிசெய்தவர். அருட்சகோதரியின் ஆன்ம இளைப்பாறுதல் பெற மறைமாவட்டம் சார்பாக செபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.




“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.”
(மாற் 16:15)

***கடவுளது சாயலாக படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும். [எபே 4:24]***

அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

### *மறைவட்ட செயலர்களின் கூட்டம்*

நமது மறைக்கல்வி நிலைய மறைவட்ட செயலர்களின் கூட்டமானது டிசம்பர் 09 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையில் தக்கலை சங்கமத்தில் வைத்து செபத்துடன் ஆரம்பமானது. அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் விவிலியக் கலைவிழா போட்டிகள் எவ்வாறு நடக்க வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றி தெளிவாக எடுத்துக் கூறினார். மேலும் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் போட்டிகள் நடத்த தேவையான அனைத்து ஆவணங்களும் மறைவட்ட செயலர்களிடம் வழங்கப்பட்டது. பின்னர் சுமார் 5.00 மணியளவில் தேநீர் விருந்துடன் கூட்டமானது இனிதே முடிவுற்றது.

### *கிறிஸ்மஸ் விழா கூட்டம்*

மறைக்கல்வி தலைமையாசிரியர்கள், ஊக்குவிப்பாளர்கள், மறைவட்ட செயலர்கள், நற்செய்தி நிலையச் செயலர், மற்றும் அலுவலக பணியாளர்களின் கிறிஸ்துமஸ் விழா கூட்டமானது டிசம்பர் 09 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தக்கலை சங்கமத்தில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மிஷன் லீக் மற்றும் குழந்தை ஈசோ இயக்க உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்



பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் முன்னிலையில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. தூய ஆவிப் பாடலுடன் கூட்டம் ஆரம்பமானது. அருட்சகோதரி. ட்ரீசா ஜோஸ் FCC அவர்கள் வரவேற்று உரை நிகழ்த்தினார். அருட்சகோதரி. மெரின் FCC அவர்கள் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார். அருட்சகோதரி தீபா CMC தலைமையில் கிறிஸ்துமஸ் வாழ்த்துப் பாடல் பாடினர். தொடர்ந்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையுரையாற்றி கேக் வெட்டி கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார். பின்னர் இயக்குநரின் உரையுடன் கிறிஸ்துமஸ் விழாக் கொண்டாட்டம் நிறைவுற்றது. திரு.செபாஸ்டின் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இறுதியில் அனைவருக்கும் கிறிஸ்மஸ் கேக் மற்றும் தேநீர் வழங்கப்பட்டது.

### *விவிலியக் கலைவிழா - தென்காசி மறைதளம்*

தென்காசி மறைதள விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகள் 2023 டிசம்பர் 10 ஞாயிற்றுக்கிழமை புதூர், புலரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பிற்பகல் 1.00 மணிக்கு பெயர் பதிவும் தொடர்ந்து 1.45 மணிக்கு தென்காசி மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை. டென்சி முண்டுநடைக்கல் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. நிகழ்வின் துவக்கமாக மறைக்கல்வி மாணவிகள் இறைவணக்கப் பாடல் பாடினர். மறைதள மறைக்கல்வி இயக்குநர். அருட்தந்தை பிறின்ஸ் வரவேற்புரை கூறினார். தொடர்ந்து அருட்தந்தை. டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் குத்து விளக்கேற்றி வாழ்த்துரை வழங்கி போட்டிகளை துவங்கி வைத்தார். ஊக்குவிப்பாளர் திரு.விஜயகுமார் அவர்கள் போட்டி விதிமுறைகளை பற்றி எடுத்துரைத்தார்.

கலைப்போட்டிகள் அனைத்தும் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெற்றது. தென்காசி மறைவட்டத்திலுள்ள 5 பங்குகளிலிருந்து 63 மாணவர்கள் போட்டிகளில் கலந்துக்கொண்டனர். அருட்தந்தை. டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுகளை வழங்கினார். தென்காசி மறைவட்ட இயக்குநர். அருட்தந்தை பிறின்ஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.



***தென்காசி மறைத்தள விவிலியக் கலைவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் தரவரிசை பட்டியல்.***

| Parish | Points | Rank |
|---|---|---|
| Carmel Matha Sunday School, Ampoor | 77 | I |
| St.Little Flower Sunday School, Puliyarai | 73 | II |
| St. Marys Sunday School, Vanji Nager | 60 | III |
| St. George Sunday School, Mekkarai | 49 | IV |
| St. Thomas Sunday School, Pudur | 30 | V |
| Sahaya Matha Sunday School Sundharapandiya puram | 21 | VI |

***விவிலியக் கலைவிழா மறைவட்டப் போட்டிகள்***

2023-2024 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா மறைவட்டப் போட்டிகள் டிசம்பர் 27 புதன்கிழமை ஆறுகாணி மற்றும் மஞ்சாலுமூடு, டிசம்பர் 28 வியாழக்கிழமை, தக்கலை பிலாங்காலை மற்றும் சூசைபுரம் மறைவட்டங்களுக்கும் டிசம்பர் 29 வெள்ளிக்கிழமை நித்திரவிளை மற்றும் படந்தாலுமூடு, டிசம்பர் 30 அன்று சனிக்கிழமை களியல் ஆகிய மறைவட்டங்களுக்கும் மறைவட்ட இயக்குநர்கள் அருட்தந்தையர்களின் தலைமையில் நடைபெற்றது. போட்டிகள் அனைத்தும் காலை 8.30 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமாகி 9.30 மணிக்கு துவக்க விழாவும் நடைபெற்றது. விவிலியக் கலைப் போட்டிகள் அனைத்தும் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணி வரை 5 அரங்குகளில் நடைபெற்றது. நிறைவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. விவிலியக் கலைவிழா போட்டிகள் நடைபெறும் நாட்களில் படந்தாலுமூடு, சூசைபுரம், மற்றும் தக்கலை - பிலாங்காலை மறைவட்டங்களில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்களும் மஞ்சாலுமூடு மற்றும் ஆறுகாணி மறைவட்டங்களுக்கு பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்களும் வருகை புரிந்தது அனைவருக்கும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்தது. விவிலியக் கலைவிழா மறைவட்ட போட்டிகள் மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்களான பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ், அருட்தந்தை லிஜோ தெக்கேல், அருட்தந்தை ஷிஜோ, அருட்தந்தை அஜின், அருட்தந்தை அஜிஷ், அருட்தந்தை எபி, அருட்தந்தை லூக்கா CMI மற்றும் மறைவட்ட செயலர்கள் அருட்சகோதரிகள் லின்ஸ் SABS, அனிதா SH, அனு மரியா SH, லிசி மேதியூ SH, எல்சீனா ASMI, வளனரசி SDS,

ஜோதிஸ் FCC ஆகியோர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

***மறைவட்ட அளவிலான போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்கள்.***

| Parish | Score | Rank |
|---|---|---|
| **Arukani Forane** | | |
| Pathukany | 141 | I |
| Netta | 103 | II |
| Arukany | 102 | III |
| Mezhacode | 34 | IV |
| Penuthadam | 33 | V |
| Anamugham | 10 | VI |
| **Kaliyal Forane** | | |
| Kaliyal | 106 | I |
| Karode | 106 | I |
| Pallikkonam | 105 | II |
| Marappady | 87 | III |
| Kulasekharam | 24 | IV |
| Chenamcode | 6 | V |
| **Manjalumoodu Forane** | | |
| Manjalumoodu | 128 | I |
| Muzhucode | 127 | II |
| Mukkoottukkal | 76 | III |
| Malaicode | 69 | IV |
| Kuttaicode | 18 | V |
| Thettivilai | 13 | VI |
| Bengiri | 3 | VII |
| **Padanthalumoodu Forane** | | |
| Palugal | 110 | I |
| Annikkarai | 101 | II |
| Padanthalumoodu | 94 | III |

| | | |
|---|---|---|
| Thrttiyode | 49 | IV |
| Kazhuvanthittai | 45 | V |
| Athencode | 18 | VI |
| Marthandam | 7 | VII |
| **Nithiravilai Forane** | | |
| Varuthattu | 127 | I |
| Vayalinkarai | 102 | II |
| Nithiravilai | 86 | III |
| Cheenivilai | 79 | IV |
| Munchirai | 31 | V |
| Christurajapuram | 3 | VI |
| **Soosaipuram Forane** | | |
| Soosaipuram | 127 | I |
| Mangarai | 93 | II |
| Palappallam | 58 | III |
| Fathimapuram | 55 | IV |
| Killiyoor | 38 | V |
| Pilankarai | 33 | VI |
| Thackalivilai | 25 | VII |
| Mathapuram | 5 | VIII |
| **Thuckalay - Pilankalai Forane** | | |
| Kattathurai | 98 | I |
| Pilankalai | 82 | II |
| Thuckalay | 73 | III |
| Nagercoil | 67 | IV |
| Paraicode | 59 | V |
| Kalluvilai | 26 | VI |
| Kaisalavilai | 15 | VII |
| Anayadi | 9 | VIII |

**அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற**
**இணை இயக்குநர்**

**அருட்தந்தை அபிலாஷ் சேவியர்**
**இயக்குநர்**

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

2023 டிசம்பர் 2 மற்றும் 3 ஆகிய நாட்களில் குழந்தை ஈசோ இயக்கத்தின் குழந்தைகளுக்கான கிறிஸ்டியன் தியானம் CMC அருட்சகோதரிகள் தலைமையில் புனித அன்னை தெரசா ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருவிவிலியப் பவனி நடைபெற்றது. அதில் அனைத்து குழந்தைகளும் திரு விவிலியத்தை முத்தம் செய்து மரியாதை செலுத்தினர். அதன் பின் ஜெபம் செய்யப்பட்டது. குழந்தை ஈசோ இயக்கத்தின் இயக்குனர் அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில் வரவேற்புரை ஆற்றினார். ஆயர் அவர்கள் தொடக்க உரையாற்றி ஆசி வழங்கினார்கள். அருட்சகோதரி நீது காவல் தூதர்களைப் பற்றியும் அருட்சகோதரி அமல் பிளசி திருச்சிலுவை



அடையாளம் வரைவதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் அதை எப்படி போட வேண்டும் என்பதைப் பற்றியும் வகுப்புகள் நடத்தினார்கள். அருட்தந்தை அஜின் அவர்கள் இடையிடையே குழந்தைகளுக்கு நல்ல அறிவுரைகள் வழங்கினார்கள்.

அருட்சகோதரி தீபா அவர்கள் தலைமையில் குழந்தைகளுக்கு செய்கை பாடல்கள் பயிற்றுவிக்கப்பட்டது. அத்துடன் இறை வார்த்தைகளும் பாடல் மூலமாக பயிற்றுவிக்கப்பட்டது. இடையிடையே விவிலிய கதைகளும், நற்பண்புகள் அடங்கிய காணொளிகளும் காண்பிக்கப்பட்டது. அருட்தந்தை அஜின் அவர்கள் தலைமையில் அருட்சகோதரி அமல் பிளஸ்ஸி வழிநடத்த நற்கருணை ஆராதனை இரு நாட்களும் நடத்தப்பட்டது. இறுதி நாள் நற்கருணைப்பவனியும் நடைபெற்றது. முதல் நாள் அருட்தந்தை டோஜி கொழுவக் கண்டத்தில் அவர்களும் இரண்டாவது நாள் அருட்தந்தை அஜின்

அவர்களும் திருப்பலி நிறைவேற்றினர். இத்தியானத்தில் ஏராளமான குழந்தைகள் பங்கெடுத்து இறையாசீர் பெற்றனர்.

***பொறுப்பாளர்களின் கூட்டம்***

09.12.2023 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நமது மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில். தக்கலை சங்கமத்தில் வைத்து பொறுப்பாளர்களின் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. ஆயர் அவர்கள் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கி கேக் பகிர்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கள் கூறினார்.

***மாசற்ற குழந்தைகள் தினம்***

31.12.2023 ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் மாசற்றக் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. அருட்தந்தையர்கள் குழந்தைகளின் தலையில் கை வைத்து செபித்தனர். சிறப்புக் காணிக்கை பவனியும் நடைபெற்றது. அனைவருக்கும் குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

***அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்***
***இயக்குநர்***

---

# அருட்தந்தை ஜாண் தெக்கேல்

“சிலரைத் திருத்தூதராகவும் சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார்”. (எபே 4.11) என்ற இறைவார்த்தையை மையமாக வைத்து, தக்கலை மறைமாவட்டத்தில் குருத்துவப் பணி செய்ய வந்த அருட்தந்தை ஜான் தெக்கேல் அவர்கள் கேரளாவில் பாலா மறைமாவட்டம் பெருங்குளம் திரு இருதய ஆலயத்தைச் சார்ந்த திரு. ஜோசப் மற்றும் திருமதி.மேரி தம்பதியினருக்கு மகனாக 1934 நவம்பர் 20 அன்று பிறந்தார். தனக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பை உணர்ந்து தன்னை குருத்துவ பணிக்கு முழுமையாக அர்ப்பணித்தார். 1966 மார்ச் 14 அன்று குருத்துவப் பட்டம் பெற்றார். தனது துறவற வாழ்வில் முதல் ஏழு ஆண்டுகள் சங்ஙானாச்சேரி உயர்மறைமாவட்டத்தில் தனது பணியை சிறப்புடன் செய்தார்.

## *தக்கலை மறைமாவட்டத்தில் இறைப்பணி*

தக்கலை மறைமாவட்டம் கன்னியாகுமரி மிஷனாக இருந்த காலத்தில் தமிழகத்தில் காலடி வைத்த அருட்தந்தை 1973 ஜூன் முதல் 1974 வரை நித்திரவிளை ஜெயமாதா ஆலயத்திலும், வயலிங்கரை புனித அந்தோனியார் ஆலயத்திலும் பங்குதந்தையாக பணி புரிந்தார்.

தொடர்ந்து 1976 செப்டம்பர் 30 முதல் 1989 பிப்ரவரி 15 வரை வாறுதட்டு புனித சவேரியார் ஆலயம் மற்றும் முஞ்சிறை புனித ஜார்ஜியார் ஆலயத்தின் பங்கு தந்தையாகவும், வாறுதட்டு MMKM பள்ளியின் தாளாளர் ஆகவும் பணிபுரிந்தார். அங்கிருந்து மாற்றலாகிய அருட்தந்தை 1997 மே 28 வரை மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயம் மற்றும் கழுவன்திட்டை புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயத்தின் பங்குதந்தையாக பணியாற்றினார். பின்னர் சில காலம் 1997 மே 28 முதல் 1998 ஜனவரி 29 வரை முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயம் மற்றும் காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தின் பங்குதந்தையாகவும் முக்கூட்டுக்கல் திருக்குடும்ப மேல்நிலைப் பள்ளியின் தாளாளராகவும் செயல்பட்டார். தொடர்ந்து 1998 ஜனவரி 29 முதல் 2003 நவம்பர் 01 வரை அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயத்திலும், 2003 நவம்பர் 01 முதல் 2013 மே 24 வரை மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி ஆலயத்தின் பங்குதந்தையாகவும் பணிபுரிந்தார்.

சமூக வாழ்வின் நாட்டம் காரணமாக 1976 அக்டோபர் 15 முதல் 1979 ஏப்ரல் 17 வரை படந்தாலுமூட்டில் செயல்பட்டு வந்த கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் செயலராக பணியாற்றினார். மீண்டும் 1997 ஜூலை 19 முதல் 2003 நவம்பர் 01 வரை கல்லுவிளை, கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் செயலராகவும் பணியாற்றினார். வயது முதிர்வின் காரணமாக 2013 மே 24 முதல் தனது பணி ஓய்வு வாழ்க்கையை முக்கூட்டுக்கல் புனித மரியன்னை இளங்குருமடத்தில் ஆரம்பித்த அருட்தந்தை தனது இறுதி நாட்களை தக்கலை, சங்கமத்தில் செலவழித்தார். 2023 டிசம்பர் 21 அன்று மாலை 3.45 மணியளவில் இவ்வுலக வாழ்வை விட்டு இறைவனிடம் சேர்ந்தார். தக்கலை மறைவாவட்ட மக்களின் ஆன்மீக வாழ்விற்கும் பொருளாதார சிக்கல்களுக்கும் வழிகாட்டியாக திகழ்ந்த அருட்பணி ஜாண் தெக்கேல் அவர்களின் பணிகள் இம்மண்ணில் என்றும் நிலையாய் நிற்கும்.

---

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| குருத்துவ அருட்பொழிவு | - ஜனவரி *02* |
| சீரோ மலபார் திருத்தொண்டு வாரம் | - ஜனவரி *06 – 12* |
| சீரோ மலபார் ஆயர் மாமன்றம், காக்கநாடு | - ஜனவரி *08 – 13* |
| அருட்தந்தையர் கூட்டம் | - ஜனவரி *16* |
| இளங்குருமட வெள்ளிவிழா கொண்டாட்டம் | - ஜனவரி *27* |

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர்
இயக்கம் **SMYM**

***கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்***

தக்கலை மறைமாவட்டம் சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 2023 டிசம்பர் 10 அன்று சூசைபுரம் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலய வளாகத்தில் மதியம் 1.30 மணியளவில் பெயர் பதிவுடன் ஆரம்பமானது. முக்கூட்டுக்கல் ஆலய SMYM உறுப்பினர்கள் இறைவணக்கம் பாடினர். மறைமாவட்ட நடுவண் செயற்குழு உறுப்பினர் சுபிலா அனைவரையும் வரவேற்று பேசினார். அருட்தந்தை மைக்கல் ஆரோக்கியசுவாமி SDB தொடக்கவுரை வழங்கி நிகழ்வை துவக்கி வைத்தார். சூசைபுரம் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை சாஜன் அவர்கள் தொடக்கவுரை வழங்கினார். தொடர்ந்து ‘கருத்தும் கானமும்’ பாடல் போட்டி நடைபெற்றது. இடையிடையே போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறும்படங்கள் ஒளிபரப்பபட்டன. மாலை 4.30 மணியளவில் கிறிஸ்துமஸ் நிகழ்வுகள் ஆரம்பமானது. மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தலைமை தாங்கினார். படந்தாலுமூடு ஆலய SMYM உறுப்பினர்கள் வரவேற்பு நடனம் ஆடினர். மாதாபுரம் ஆலய SMYM உறுப்பினர் சுஜிதா அனைவரையும் வரவேற்று பேசினார். சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சிகளை தொடங்கிவைத்தனர். தொடர்ந்து பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தலைமையுரை வழங்கினார். இடையிடையே மாங்கரை, வயலின்கரை, பாலப்பள்ளம் இளையோர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. கிறிஸ்துமஸ் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் சிறப்புரை வழங்கி வெற்றி பெற்றோர் விவரங்களை அறிவித்தார்.

***கிறிஸ்துமஸ் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களின் விவரம்***

***குறும்பட போட்டி***

| | |
|---|---|
| முதல் பரிசு | லொரோட்டா மாதா அலகு - பிலாங்கரை |
| இரண்டாம் பரிசு | புனித வியாகப்பர் அலகு – மாங்கரை |
| மூன்றாம் பரிசு | புனித சூசையப்பர் அலகு - சூசைபுரம் |

***‘கருத்தும் கானமும்’ பாடல் போட்டி***

| | |
|---|---|
| முதல் பரிசு | புனித குழந்தை தெரசாள் அலகு - பிலாங்காலை |

| | |
|---|---|
| இரண்டாம் பரிசு | புனித மார்டின் டி போரஸ் அலகு - கழுவன்திட்டை |
| மூன்றாம் பரிசு | திருக்குடும்ப அலகு – முக்கூட்டுக்கல் |

***சிறப்பு பரிசுகள்***

| | | |
|---|---|---|
| சிறந்த இயக்குநர் | அபிஷ் ஸ்டெபின் | பிலாங்கரை சூசைபுரம் |
| சிறந்த ஒளிப்பதிவாளர் | ஷிஜோ | பிலாங்கரை |
| சிறப்பு பரிசு | வகிஷா | காரோடு |

இறுதியில் SMYM மறைமாவட்ட தலைவர் மனோஜ் அனைவருக்கும் நன்றி கூறினார். மறைமாவட்ட பொறுப்பாளர்கள் அஞ்சனா மற்றும் ஜெசிலா மேரி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். இந்நிகழ்ச்சிகளில் சுமார் 300 இளையோர்கள் பங்குகொண்டனர், 'கருத்தும் கானமும்' பாடல் போட்டியில் 16 குழுக்களும், குறும்பட போட்டியில் 7 குழுக்களும் பங்கேற்றனர். நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் வழிகாட்டுதலின் பேரில் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு தலைமையிலான இளையோர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

***ஆயருடன்...***

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்க இயக்குநர் மற்றும் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் இணைந்து 2023 டிசம்பர் 24 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் தக்கலை ஆயர் இல்லத்தில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB மற்றும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவ்வத்துபறம்பில் ஆகியோரை சந்தித்து கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்திகளை தெரிவித்துக்கொண்டனர், ஆயர் அவர்கள் அனைவருக்கும் இனிப்பு மற்றும் பரிசு பொருட்களை வழங்கினார்.



***இவண்***
***அகில், செயலர்***

# இல்வாழ்வு இயக்கம்
## தக்கலை மறைமாவட்டம்



### மறைமாவட்ட பெறுப்பாளருக்கான கூட்டம்

மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட பெறுப்பாளருக்கான கூட்டம் டிசம்பர் 4ம் தேதி இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இதில் மாதர் ஜோதிஸ் கிறிஸ்துமஸ் விழா மற்றும் போட்டிகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. மேலும் Smart Christmas க்கான இக்கூட்டத்தில் இல்வாழ்வு இயக்க உதவி இயக்குநர் மற்றும் பெறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### கிறிஸ்துமஸ் விழா

மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் கிறிஸ்துமஸ் விழாவானது டிசம்பர் 16 ம்தேதி காட்டாத்துறை, புனித மிக்கேல் அதிதூதர் பள்ளி வளாகத்தில் நடைத்தப்பட்டது. காலை 9.30 மணிக்கு பெயர் பதிவுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. தொடர்ந்து குழு பாடல் போட்டி நடைபெற்றது. பாடல் போட்டியில் 35 பங்குகளில் இருந்து 35 குழுக்கள் பாடல் பாடினார்கள். பாடல் போட்டியில் கலந்து கொண்டு மறைவட்ட அளவில் முதல் மூன்று இடத்தை பிடித்த பங்குகளுக்கு ஆண்டு விழாவின் போது பரிசுகள் வழங்கப்படவுள்ளது. தொடர்ந்து உணவுத் திருவிழா போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் 164 பேர் கலந்துக்கொண்டனர். புதுமை மற்றும் சுவையின் அடிப்படையில் Categorize செய்து பரிசுகள் வழங்கப்படும். தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் மதியம் 1.40 மணியளவில் நடைபெற்றது. பரைக்கோடு பங்கு மாதர் ஜோதிஸ்



தாய்மார்கள் இறைவணக்க பாடல் பாடினார்கள். சீனிவிளை பங்கை சார்ந்த திருமதி சுஜிதா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பளுகல், புனித தோமையார் ஆலயம் தாய்மார்கள் கிறிஸ்து பிறப்பு பாடலை பாடினர். தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் தலைமை உரை வழங்கினார்கள். பின்னர் Smart Christmas யில் இணைந்து பங்களவில் 94 பேர் பணம் செலுத்தி நித்திரவிளை பங்கு மறைமாவட்ட அளவில் முதலிடத்தையும், பங்களவில் 65 பேர் பணம் செலுத்தி மாறப்பாடி பங்கு இரண்டாவது இடத்தையும், கைப்பற்றினர்கள். அவர்களுக்கு ஆயர் அவர்கள் பரிசு மற்றும் பணம் வழங்கினார்கள். வாறுத்தட்டு பங்கு தாய்மார்கள் கிறிஸ்துப் பிறப்பு பாடலுக்கு நடனமாடினார்கள். அருட்தந்தை ஜோஸ் வயலில் பரிசுகளை வழங்கினார். சூசைபுரம் பங்கை சார்ந்த திருமதி ஜெசி மேரி அனைவருக்கும் நன்றி கூறினார். சுமார் 3 மணியளவில் விழா இனிதே நிறைவுற்றது. இந்நிகழ்வுகளில் சுமார் 120 தாய்மார்கள் மற்றும் அருட்சகோதரிகள் கலந்து கொண்டனர்.

### திருமண ஆயத்தப் பயிற்சி

திருமணத்திற்கு தயராகும் இளையோருக்கான திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது டிசம்பர் 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.இப்பயிற்சி வகுப்பின் இரண்டாவது நாள் வகுப்பிற்கு பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்கள் வருகைப்புரிந்து சான்றிதழ் வழங்கினார். இப்பயிற்சி வகுப்பில் 8 பேர் கலந்து கொண்டனர்.

### அலுவலக பணியாளர்களின் கிறிஸ்துமஸ் விழா

இல்வாழ்வு இயக்க அலுவலகப் பணியாளருக்கான கிறிஸ்துமஸ் விழாவானது டிசம்பர் 20ம் தேதி புதன்கிழமை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் நடைபெற்றது.



இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் வாழ்த்துரை வழங்கினார். அலுவலக பணியாளர்கள் ஒருவருக்கொருவர் பரிசு பொருட்கள் பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து கேக் வெட்டி அலுவலக பணியாளருக்கு பகிர்ந்தளித்தார்கள். சுமார் 1.00 மணியளவில் விழா இனிதே நிறைவுற்றது.

**அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்**
**இயக்குநர்**




# வின்செண்ட்-தே-பவுல் சபை

### *திட்டம் வழங்குதல்*

மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் கிளை சபை சார்பாக கிறிஸ்து பிறப்பு திருநாளை முன்னிட்டு 24.12.2023 அன்று மூன்று தத்து குடும்பங்களுக்கு பண உதவி மளிகை பொருட்கள் காய்கறி, கேக் என ரூ.3317/- மதிப்பிலான பொருட்கள் கொடுக்கப்பட்டது.

மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட முக்கூட்டுக்கல் திருக்குடும்ப கிளை சபை மற்றும் புனித மரியா கிளை சபை சார்பாக 14 தத்து குடும்பங்களுக்கு கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு 24.12.2023 அன்று ரூ.7000/- வழங்கப்பட்டது.

தென்காசி வட்டார சபைக்குட்பட்ட வாஞ்சி நகர் கிளை சபை சார்பாக 5 ஏழை குடும்பங்களுக்கு பொருள் உதவிகள் வழங்கப்பட்டது.



புனித அந்தோனியார் ஆலயம் வயலின்கரை புனித வின்செண்ட் தே பவுல் கிளைச் சபையின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டமானது 24.12.2023 மாலை 3 மணியளவில் துவக்க ஜெபத்துடன் இனிதே ஆரம்பமானது. நிகழ்ச்சியில் கிளைச்சபையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை அஜிஷ் அட்டியில் அவர்கள் தலைமை தாங்கி கிறிஸ்துமஸ் கேக் வெட்டி சிறப்பித்தார். நிகழ்ச்சியில் 15 தத்து குடும்பங்களுக்கு தலா Rs.1000/- Total(Rs.15000), 5kg அரிசி மற்றும் கிறிஸ்துமஸ் கேக்கும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் வின்செண்ட் தே பவுல் சபை உறுப்பினர்கள் மற்றும் துணை உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

### *ஓசானாம் உயர் கல்வி நிலையம் - உத்தரங்கோடு*

உத்தரங்கோடு ஓசானாம் உயர் கல்வி நிலையத்தில் 2.12.2023 அன்று 21 - வது வேலைவாய்ப்பு பயிற்சி பட்டறை வகுப்பானது. துவங்கப்பட்டது. கூட்டத்தில்

தக்கலை மத்திய பேரவை தலைவர் சகோ. ராபி அவர்கள் துவக்கவுரையாற்றி துவங்கி வைத்தார்கள். மஞ்சாலுமூடு வட்டரா சபை தலைவர் சகோ. ஜார்ஜ் வின்செண்ட் அவர்கள் சிறப்புரையாற்றினர். இடையிடையே மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

ஓசானம் உயர் கல்வி நிலையத்தில் 16.12.2023 அன்று கிறிஸ்மஸ் விழா நடைபெற்றது விழாவில் சகோ. ஐயாத்துரை அவர்கள் துவக்கவுரையாற்றி கூட்டத்தை துவங்கி வைத்தர்கள். மத்திய சபை தலைவர் சகோ. றாபி மற்றும் சகோ. எட்வின்சன், சகோ. சோனீக் ரீகன், சகோதரி. லதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். கூட்டத்தின் இடையிடையே மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது.




***சகோ. D.Pஷாஜி,***
***தகவல் தொடர்பு அலுவலர்***

| FEASTDAYS OF REV. FATHERS - JANUARY 2024 | |
|---|---|
| Fr. Johnsilal Arackaparampil | 03 |
| Fr. Sanil Panthichirackal | 03 |
| Fr. Davis Karukappally CMI | 20 |
| Fr. Joshy Thevalakkara CMI | 20 |
| Fr. Justin Cheruvelil | 20 |
| Fr. Mijo Puthenpurayil | 20 |
| Fr. Robin Koorumullil | 20 |
| Fr. Sebastian Pothemparampil MST | 20 |
| Fr. Seby Manimalakandathil | 20 |
| Fr. Shijo Jose Aikkarakunnel | 20 |

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

***Educare கிறிஸ்துமஸ்-2023***

தக்கலை மறைமாவட்டத்திலுள்ள ஏழை மாணவர்கள் ஆங்கில புலமையுடன் கூடிய திறமையானவர்களாக பயிற்சி அளித்து வருவது Educare அலகு. இந்த மாணவர்களின் கிறிஸ்துமஸ் விழா டிசம்பர் 17 அன்று KKSSS அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. KKSSS இயக்குநர் அருட்தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமை தாங்கினார் சிறப்பு விருந்தினராக HEAL மையத்தின் நிறுவனரும் இயக்குநர் திரு.சிலுவை வஸ்தியன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நிகழ்வில், முளகுமூடு பஞ்சாயத்து தலைவர் திருமதி. ஜெனிஷா அஜித் வாழ்த்துரை வழங்கிளார். இயேசுவின் பிறப்பினைச் சித்தரிக்கும் வகையில் குடில் மற்றும் இயேசு பிறப்பை பற்றிய நாடகம் நடைபெற்றது. நிகழ்வுக்கு இடைடையே கலைநிகழ்சிகள் நடைபெற்றன. அனைத்து நிகழ்வுகளையும் Educare ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி.மெரின் றோஸ் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார். இதில் சுமார் 200 மேற்பட்ட மாணவர்கள்;, பெற்றோர் அலுவலக பணியாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்



***கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்***

கன்னியாகுமரி சமூக சேவை சங்க பணியாளர்களின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் 22 தேதி KKSSS வளாகத்தில் எளிமையாக நடைபெற்றது .முன்னாள் KKSSS இயக்குநர் தந்தை ஜான் தெக்கேல் அவர்களின் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. KKSSS ஆலோசகர் முனைவர் சத்தியதாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இதில் KKSSS குடும்பத்தின் பணியாளர்கள்

அனைவரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து படந்தாலுமூடு, திருஇருதய ஆலயத்தில் அருட்தந்தை ஜான் தெக்கேல் அவர்களின் உடலுக்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணியாளர்கள் அஞ்சலி செலுத்தினர்.

***நினைவுத் திருப்பலி***

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் முன்னாள் இயக்குநர் பேரருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் 10 ஆண்டு நினைவு நாள் டிசம்பர் 14 தேதி அனுசரிக்கப்பட்டது. கல்லுவிளை, புனித அனனை தெரசா ஆலயத்தில் அருட்தந்தை அஜின் C அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இதில் KKSSS அலுவலகப்பணியாளர்கள், தக்கலை நிதி லிமிடெட் பணியாளர்கள், களப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

***கிறிஸ்துமஸ் விழா***

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் மாறப்பாடி மற்றும் தொற்றியோடு சுய உதவி குழுக்கள் சார்பாக கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. மாறப்பாடி மையத்தின் சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் அருட்தந்தை ரோபின் கூறுமுள்ளில் தலைமையிலும் தெற்றியோடு மையத்தில் KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை அஜின்.C தலைமையிலும் நடைபெற்றது. நிகழ்வில் பஜனை மற்றும் கிறிஸ்மஸ் தாத்தா போட்டிகளும் நடைபெற்றது. நிகழ்வின் இடையிடையே கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியாக இனிப்புகள் பரிசுப்பொருட்கள் வழங்கி கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டனர்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

---

## புலம் பெயர்ந்தோர் திருத்தொண்டுப் பணிக்குழு

மறை மாவட்டத்தின் புலம் பெயர்ந்தோர் திருத்தொண்டுப் பணிக்குழுவின் இரண்டாவது சென்னை சங்கமம் 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை ஒசூர் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. மாலை 4.00 மணியளவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து இறைவணக்க பாடலோடு கிறஸ்து பிறப்பு நிகழ்வுகள் ஆரம்பமானது. இயக்குநர் அருட்தந்தை சுமேஷ் வள்ளியாம்தடத்தில் வரவேற்புரை வழங்கினார். ஒசூர் மறைமாவட்ட அருட்தந்தை அபிஷேக் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திரு. சாம் டேவிட் அவர்கள் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து கிறிஸ்துமஸ் கேக் வெட்டி நினைவு பரிசு வழங்கப்பட்டது. சென்னை ஒருங்கிணைப்பாளர் திரு. ஜோஸ் ராஜ் அவர்கள் நன்றி கூறினார். இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவடைந்தது. நிகழ்வினை பொது ஒருங்கிணைப்பாளர் திரு எட்வின்சன் தொகுத்து வழங்கினார். நிறைவாக அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

# புலரி சமூக சேவை சங்கம்
## தென்காசி மறைபரப்புதளம்

### தலைமைத்துவ பயிற்சி

புலரி சமூக சேவை மையத்தின் சார்பாக 3.12.2023 அன்று மகளிர் குழு தலைவிகளுக்கான ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சி முகாம் நடைபெற்றது. தென்காசி மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர் செல்வி. மார்க்ரெட் அவர்கள் கருத்தாளராக கலந்து கொண்டு மகளிரை பாதுகாக்கும் சட்டங்கள் மற்றும் மகளிர் மேம்பாடு பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறி பயிற்சி வழங்கினார். இந்நிகழ்வை புலரி சமூக சேவை மைய இயக்குநர் அருட்பணி. மகேஷ் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் ஏறத்தாழ 20 மகளிர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### கண் பரிசோதனை முகாம்

புலரி சமூக சேவை மையமும் திருநெல்வேலி டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையும் இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் 10.12.2023 அன்று கொட்டாக்குளம் ஆர்.சி தொடக்கப் பள்ளிக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்வை கொட்டாக்குளம் புனித செபஸ்தியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி. விசுவாச ஆரோக்கியம் அவர்கள் துவக்கி வைத்தார். சுமைதீர்த்தபுரம் ஊராட்சி ஒன்றிய தலைவர் திரு. அருணாச்சலம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இம்முகாமில் பங்கேற்று பயனடைந்தார்கள்.



### சமூக நல்லிணக்க கிறிஸ்துமஸ்


புலரி சமூக சேவை மையத்தின் சார்பாக சமூக நல்லிணக்க கிறிஸ்மஸ் விழா 17.12.2023 அன்று நடத்தப்பட்டது. நிகழ்விற்கு அருட்பணி. மகேஷ் அவர்கள் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக செங்கோட்டை ஏஜி சபை போதகர் அருட்திரு பால் பிரகாஷ், செங்கோட்டை ஜமாத் தலைவர் திரு. அகமது மீரான், இலஞ்சி ஓம் பிரணாம ஆசிரம தலைவர் சுவாமி கிருஷ்ணானந்த சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நிகழ்வில் மாணவ மாணவியரின் கலை நிகழ்சிகள் நடைபெற்றது. நிகழ்வில் மும்மத தலைவர்கள் இணைந்து கேக் வெட்டி பரிமாறி தங்கள் அன்பை பகிர்ந்து கொண்டனர். அருட் சகோதரி அல்போன்சா FCC அவர்கள் நிகழ்வை ஒருங்கிணைத்தார். திருமதி கிறிஸ்டி அவர்கள் தொகுத்து வழங்கினார். பல்வேறு மதங்களைச் சார்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

### அலுவலக பணியாளர்களுடன் கிறிஸ்மஸ்

புலரி சமூக சேவை மையத்தில் பணிபுரியும் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தையல் பயிற்சி பெறும் மாணவிகள் இணைந்து 22.12.2023 அன்று கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது . நிகழ்வில் தென்காசி மறைத்தொண்டு தள ஒருங்கிணைப்பாளர் அருட்பணி. டென்சி அவர்கள் கலந்து கொண்டு கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார். பிரானூர் வார்டு உறுப்பினர் திரு ஸ்ரீனிவாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். புதூர் பங்கின் பங்குத் தந்தை அருட்பணி பிரின்ஸ் அவர்கள் முன்னிலை வகித்தார்.

### மாணவர்களுடன் கிறிஸ்துமஸ்

புலரி மாலைநேர வகுப்பில் பயிலும் மாணவ மாணவிகள் இணைந்து கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடினர். அருட்பணி. மகேஷ் அவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தி வழங்கினார். இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



***செய்தியாளர்***
***திருமதி.அனு கிறிஸ்டி***

# அருட்சகோதரர்களிடமிருந்து

அருட்சகோதரர்கள் அனைவரும் நலமாக உள்ளனர். அனைத்து குருத்துவ கல்லூரிகளிலும் கிறிஸ்து பிறப்பு விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அருட்சகோதரர்கள் அனைவரும் விடுமுறைக்காக தங்கள் வீடுகளுக்கு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி சென்றார்கள். நமது மறைமாவட்டத்தில் பணியாற்றிய அருட்தந்தை ஜாண் தெக்கேல் அவர்களது நல்லடக்க நிகழ்வுகளில் அனைத்து அருட்சகோதரர்களும் கலந்து கொண்டனர். அருட்சகோதரர்களின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டமானது 23 ஆம் தேதி தக்கலை ஆயர் இல்லத்தில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மறைமாவட்டத்தின் மறைக்கல்வி நிலையம் சார்பாக நடத்தப்பட்ட மறைவட்ட விவிலிய போட்டிகளுக்கு நடுவர்களாக அருட்சகோதரர்கள் சென்றிருந்தார்கள். திருத்தொண்டர் லிஜூ அவர்கள் ஜனவரி மாதம் 2 ஆம் தேதி குருவானவராக அருட்பொழிவு செய்யப்பட உள்ளார். அவர்களுக்கு அருட்சகோதரர்களின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுகளும். எங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி.

***சகோ. சுனில் ஆன்றணி***

## புனித மரியன்னை இளங்குருமடம் - முக்கூட்டுக்கல்

புனித மரியன்னை இளங்குருமடத்தின் சீட்ஸ் அமைப்பின் கூட்டமும், கிறிஸ்துமஸ் விழாவும் 22.12.2023 அன்று மாலை 6.00 கொண்டாடப்பட்டது.



# மறைமாவட்டச் செய்திகள்

## மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா

மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா 2023 டிசம்பர் 01, 02, 03, (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் நடைபெற்றது. மதுரை தூய ஆவியார் தியான இல்லத்தை சார்ந்த அருட்தந்தை ஜான் கென்னடி SHS மற்றும் திருவனந்தபுரம் மவுண்ட் கார்மல் தியான இல்லத்தை சார்ந்த அருட்தந்தை விமல் ஆகியோர் வழிநடத்தினர். மறைக்கல்வி மாணவர்களுக்கான தியானம் அருட்தந்தை பிரிண்டோ மற்றும் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. குழந்தைகளுக்கான தியானத்தை அருட்தந்தை டோஜி மற்றும் CMC அருட்சகோதரிகள் வழிநடத்தினர். அருட்தந்தை அனில் ராஜ் அவர்கள் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

## அருட்தந்தை தோமஸ் தெக்கேல் – நினைவு திருப்பலி

அருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் 10 ஆம் ஆண்டு நினைவுத்திருப்பலி மாங்குளத்தில் உள்ள அவரது குடும்ப ஆலயத்தில் 2023 டிசம்பர் 14 அன்று நடைபெற்றது. அருட்தந்தை எபி பூவத்துமூட்டில் மற்றும் அருட்தந்தை ஜோஸ்மோன் புரையிடத்திருந்நேல் ஆகியோர் திருப்பலி நிறைவேற்றி ஒப்பீசு செபித்தனர். KKSSS அலுவலக ஊழியர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மதுரை மறைபரப்புதள இணையதளம் துவக்கம்

மதுரை மறைபரப்புதள வளர்ச்சியின் ஒருபகுதியாக புதிய இணையதள முகவரி தொடங்கப்பட்டுள்ளது. 'www.syromalabarchurchmadurai.in' மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் 2023 டிசம்பர் 17 அன்று அதிகாரபூர்மாக துவங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் 'Syro-Malabar Mission, Madurai' என்ற பெயரில் Youtube Chennal செயல்படுகிறது. இதற்கான முயற்சிகளை அருட்தந்தை ஜோகேஷ் போளச்சிற அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

## குருக்களுக்கான கூட்டம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

மறைமாவட்ட அருட்தந்தையர்களின் கூட்டம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 2023 டிசம்பர் 19 அன்று மாலை 4.30 மணியளவில் தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. பேரருட்தந்தை ஜோஷி

குளத்துங்கல் அவர்களால் அருட்பணிபேரவையின் தீர்மானங்கள் கலந்துரையாடப்பட்டது. தொடர்ந்து கிறிஸ்துமஸ் கேக் வெட்டி கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டங்கள் நடைபெற்றது. அருட்தந்தை செபாஸ்டின் புத்தன்பறம்பில் MST அவர்கள் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார். தொடர்ந்து கிறிஸ்துமஸ் பரிசுகள் வழங்கப்ட்டன. நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் தலைமையில் சிறப்பாக செய்திருந்தார்.

- **சீரோ மலபார் சபையின் நூற்றாண்டு விழா**

சீரோ மலபார் திருச்சபை தனி சபையாக அறிவிக்கப்பட்டதின் நூற்றாண்டு விழா திருப்பலி 2023 டிசம்பர் 21 வியாழக்கிழமை, படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலய வளாகத்தில் மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் மறையுரை வழங்கினார். பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் மற்றும் அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

- **யூபிலி ஆண்டு 2025 துவக்க விழா**

இயேசு கிறிஸ்து பிறந்து 2025ஆம் ஆண்டு யூபிலி நமது மறைமாவட்டத்தில் கொண்டாடப்படவுள்ளது. இதன் துவக்க விழா அனைத்து ஆலயங்களிலும் சிறப்பு செபத்துடன் 2023 டிசம்பர் 31 அன்று தொடங்கப்பட்டது. கைசாலவிளை, புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் கலந்து கொண்டு நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கினார்.

## இதர செய்திகள்

- அருட்சகோதரர் காட்வின் தனது இறைபணியை தென்காசி மறைபரப்பு தளத்தில் 2023 டிசம்பர் 05 அன்று துவங்கியுள்ளார்.
- அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தனது முனைவர் பட்ட இறுதி ஆய்விற்காக 2023 டிசம்பர் 15 அன்று ரோம் சென்றுள்ளார்.
- அருட்தந்தை ஜான் தெக்கேல் அவர்களின் 7 ஆம் நாள் நினைவுத் திருப்பலி 2023 டிசம்பர் 27 அன்று மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

# தென்காசி மறைத்தள செய்திகள்

## அமல உற்பவ திருநாள்

தென்காசி ரெயில்வே கேட் அருகாமையில் அமைந்துள்ள அமல உற்பவ குருசடியில் டிசம்பர் 8 ஆம் தேதி திருப்பலி நிறைவேற்றி கொண்டாடப்பட்டது. அருட்தந்தை தோமஸ் தக்கலை மற்றும் அருட்தந்தை ஆன்றணி மகேஷ் ஆகியோர் இணைந்து திருப்பலி நிறைவேற்றி விழாவினை சிறப்பித்தனர்.



## கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

தென்காசி மறைத்தள அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் டிசம்பர் 16 அன்று புதூர் புலரி மெட்ரிகுலேஷன் பள்ளியில் நடைபெற்றது. மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார். அருட்தந்தை ஆன்றணி காச்சாங்கோடு அவர்கள் தியான உரை வழங்கினார். தொடர்ந்து ரம்ஸா ஜெபிக்கப்பட்டது. ஒப்புரவு அருட்சாதனமும் வழங்கப்பட்டது. பின்னர் கிறிஸ்துமஸ் பரிசு ஒருவருக்கொருவர் பகிரப்பட்டது. இறுதி ஆசீருக்கு பின்பு அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

## மாதர் ஜோதிஸ் தாய் மார்களுக்கான கரோல் போட்டி

தாய் மார்களுக்கான கிறிஸ்து பிறப்பு குழுப்பாடல் போட்டி டிசம்பர் 17 ஆம் தேதி பார்டரில் வைத்து நடத்தப்பட்டது. இதில் வாஞ்சி நகர் ஆலயம் முதல் பரிசையும், சுந்தர பாண்டிய புரம் - மறைத்தளம் இரண்டாம் பரிசையும், மேக்கரை ஆலயம் மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

## இளைஞர் இயக்கம்

இளைஞர் இயக்கம் சார்பாக கிறிஸ்துமஸ் கொண்டாட்டமானது டிசம்பர் 17 ஆம் தேதி பார்டரில் வைத்து நடத்தப்பட்டது. இதில் மறைத்தள இளைஞர் இயக்க இயக்குநர் அருட்தந்தை ஆன்றணி மகேஷ் அவர்கள் தலைமை வகித்தார்.

*அருட்சகோதரி. லிபியா CMC*

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு


11.12.23 முதல் 19.12.2023 வரை பஜனை நடைபெற்றது. 24.12.2023 அன்று கிறிஸ்து பிறப்பு திருவிழா திருப்பலி இரவு 10 மணிக்கு நடைபெற்றது. 28.12.2023 அன்று மாசற்ற குழந்தைகள் திருநாளை முன்னிட்டு காலை 6:30 மணிக்கு குழந்தைகளுக்கான சிறப்பு திருப்பலி நடைபெற்றது.

31.12.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை திருப்பலியிலும் மாசற்ற குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. குழந்தை ஈசோவுக்கு குழந்தைகள் பூக்கள் பரிசளித்தனர். பங்குதந்தை அவர்கள் குழந்தைகளின் தலையில் கை வைத்து ஜெபித்தார்கள். 31.12.2023 அன்று புது வருட ஆராதனை மற்றும் திருப்பலி இரவு 10 மணிக்கு நடைபெற்றது.

### புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஆயத்தமாக 18.12.2023 முதல் 20. 12.2023 வரை மூன்று நாள் தியானம் நடைபெற்றது. இத்தியானத்தை பத்தனாம் திட்டையைச் சார்ந்த அருட்சகோதரர். ஜோஸ் அவர்கள் வழி நடத்தினார்கள்.

20.12.2023 அன்று மாலை 4 மணிக்கு தெற்றியோடு பவுல் ஆலயத்தை சார்ந்த மக்கள் மற்றும் ஊர் மக்கள் சேர்ந்து கிறிஸ்து பிறப்பு விழா கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.



31.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியுடன் மாசற்ற குழந்தைகள் தினம் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. குழந்தைகளுக்கு தலையில் கைவைத்து சிறப்பு செபம் ஏறெடுக்கப்பட்டது. குழந்தை ஈசோ உறுப்பினர்கள் காணிக்கை பவனி நடத்தினர்.

### புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம் – கழுவன்திட்டை

10.12. 2023 அன்று பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அருட்தந்தை இல்லம் கட்டுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

24.12.2023 அன்று கிறிஸ்து பிறப்பு திருவிழா திருப்பலி இரவு 10 மணிக்கு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

## மஞ்சாலுமூடு

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு

மிஷன் ஞாயிறு காணிக்கை அதிக தொகை (35000) கொடுத்ததற்காக மறைமாவட்ட அளவில் முதல் பரிசு கிடைத்தது.

14.12.2023 அன்று களியக்காவிளை திரையரங்கில் திரையிடப்பட்ட புனித ராணி மரியாவின் வாழ்க்கை வரலாறு திரைப்படம் காண்பதற்காக மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் ஆலயம் மற்றும் தெற்றி விளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் இருந்துமாக சுமார் 95 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.



திரு செல்வன் ஆசிரியருக்கு சொந்தமான மாவர்தலவிளை இடத்தில் கட்டப்பட்டுள்ள குருசடியை ஆயர் அவர்கள் 28.12.2023 அன்று அர்ச்சித்தார்கள். இவ்விழாவில் புனித குழந்தை தெரசா ஆலய பங்குத்தந்தை பேரருட்தந்தை. அகஸ்டின் தலோடில் அவர்களும் துணை பங்குத்தந்தை மிஜோ அவர்களும் கலந்து கொண்டார்கள்.

### புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – தெற்றிவிளை

தெற்றிவிளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தின், புதிய ஆலயத்திற்கான முன்பக்க வாயில் நிலை ஆயர் அவர்களால் 28.12.2023 அன்று மந்திரிக்கப்பட்டது.

### புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு

31.12.2023 அன்று 2025 ஆம் ஆண்டு ஈசோவின் பிறப்பு ஜூபிலி தொடக்க விழா மற்றும் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது.

## களியல்

### புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்

24.12.2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியளவில் கிறிஸ்துபிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றது.

31.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியுடன் இணைந்து மாசற்ற குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து குழந்தைகளுக்கு தலையில் கைவைத்து சிறப்பு செபம் ஏறெடுக்கப்பட்டது. தொடர்ந்து பங்குதந்தை அவர்கள் தலைமையில் மகா ஜுபிலி குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கப்பட்டது.



**புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு**

கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு மறைக்கல்வி மாணவர்களுக்கான கிறிஸ்துமஸ் குடில் போட்டி 2023 டிசம்பர் 23 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது.

கிறிஸ்து பிறப்பு திருநிகழ்வுகள் 24.12.2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குடில் போட்டி மற்றும் காண்காட்சிகான பரிசுகள் வழங்கப்பட்டது. மிஷன் லீக் மாணவர்கள் தலைமையில் மரவிழா மற்றும் இளையோர்கள் தலைமையில் உணவு விழா நடைபெற்றது.

2023 டிசம்பர் 28 அன்று மாசற்ற குழந்தைகள் தினம் தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தில் காலை 7.30 மணியளவில் நடைபெற்றது. தொடர்ந்து கேக் வெட்டி அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.



31.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியுடன் இணைந்து குழந்தைகளுக்கு

தலையில் கைவைத்து சிறப்பு செபம் ஏறெடுக்கப்பட்டது. அன்றைய நாள் திருப்பலியில் விவிலிய வாசகங்கள் மற்றும் காணிக்கை பவனி நிகழ்வுகளை குழந்தை ஈசோ உறுப்பினர்கள் முன்னெடுத்தனர்.

### ▶ புனித இரண்டாம் ஜாண் பால் ஆலயம் – குலசேகரம்

2023 டிசம்பர் 17-ம் தேதி ஆலயத்தில் செயல்பட்டு வரும் Eucharist Association சார்பில் புனித பயணம் மேற்கொள்ளப்பட்டது.

## சூசைபுரம்

### ▶ புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்

டிசம்பர் மாதம் 8 தேதி முதல் 13 நாட்கள் எல்லா வீடுகளுக்கும் சென்று கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியினை அறிவிக்கும் பஜனை பாடல்கள் பங்கு மக்களால் நடத்தப்பட்டது.

10.12.2023 அன்று காலை திருப்பலிக்குப் பின்னர் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலய புனித வின்சென்ட் தே பவுல் சபை மற்றும் புனித சூசையப்பர் கிளைச் சபையின் 60-ஆவது ஆண்டு நிறைவு விழாவானது தக்கலை மத்திய சபை தலைமை பணியாளர் திரு ராபி அவர்கள் தலைமையில், பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆண்டனி ஜோஸ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. சபையின் மூத்த உறுப்பினர் திரு.தேவராஜ் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். பின்னர் அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.




24.12.2023 அன்று சூசைபுரம் புனித வின்சென்ட் தே பவுல் இயக்க உறுப்பினர்கள் இணைந்து தக்கலை மறைமாவட்ட மறைத்தொண்டு தளமான ஆம்பூருக்கு சென்று ரூபாய் ஒரு லட்சம் மதிப்பிலான அரிசி, பருப்பு, காய்கறிகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை அங்குள்ள 30 குடும்பங்களுக்கு கொடுத்து உதவினார்கள்.

கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலியானது 24.12.2023 நள்ளிரவு 11:30 க்கு அருட்தந்தை மேத்யூ தெக்கேக்குற்று மற்றும் அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி ஆகியோரால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்கு பின்னர் இளையோர்களால் உருவாக்கப்பட்ட குடில் திறந்து வைக்கப்பட்டது. இளையோர்கள் தலைமையில் கலை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. உறவிய இறைமக்கள் ஒன்றிணைந்து பஜனை பாடல்கள் பாடினார்கள்.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலபள்ளம்

2023 டிசம்பர் மாதம் 9 நாட்கள் பஜனை நடைபெற்றது. டிசம்பர் 8 அமலோற்பவ திருநாளை முன்னிட்டு காலையில் திருப்பலியும் மாலையில் ஆலய கெபியில் சிறப்பு ஜெபமாலையும் நடைபெற்றது. கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு டிசம்பர் 18 மாலை 6.30 மணிக்கு திருப்பலி, ஆராதனை மற்றும் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது.

23 ஆம் தேதி காலை திருப்பலியினைத் தொடர்ந்து பங்கின் அனைத்து குடும்பங்களுக்கும் கிறிஸ்துமஸ் கேக் வழங்கப்பட்டது. அன்று மாலை இளையோர்கள் முன்னின்று உருவாக்கிய கிறிஸ்மஸ் குடில் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து கிறிஸ்து அரசர் மழலையர் பள்ளியின் கிறிஸ்மஸ் விழா சிறப்பாக நடைபெற்றது.

டிசம்பர் 24 ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு கிறிஸ்துபிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றது. மாசற்ற குழந்தைகள் திருநாள் பங்களவில் டிசம்பர் 31ஆம் தேதி சிறப்பு திருப்பலி மற்றும் குழந்தைகளின் சிறப்பு காணிக்கைப் பவனியோடு கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுகளில் பங்கில் அனைத்து குழந்தைகளும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

### தூய தேவ மாதா ஆலயம் – கிள்ளியூர்

10-12-2023 அன்று திருப்பலிக்கு பின் பங்குத்தந்தை தலைமையில் பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. அனைத்து பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

20-12-2023 புதன்கிழமை அன்று மாலை 6 மணிக்கு திருப்பலியை தொடர்ந்து அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு அவர்களால் ஒப்புரவு வழிபாட்டிற்கான சிறப்பு வகுப்பு நடைபெற்றது. தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் ஒப்புரவு வழிபாடும் நடை பெற்றது.

24-12-2023 அன்று ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் உறவியங்களின் அடிப்படையில் கிறிஸ்து பிறப்பு பாடல் போட்டி நடைபெற்றது. அதை

தொடர்ந்து குழந்தைகளுக்கு கிறிஸ்மஸ் தாத்தா போட்டி நடைபெற்றது.

24-12-2023 அன்று இரவு 10 மணிக்கு திருப்பலி பங்கு தந்தை அவர்களால் நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்கு இடையில் பவனி நடைபெற்றது. திருப்பலி முடிந்த பிறகு கேக் வெட்டி அனைவருக்கும் கேக் வழங்கி கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதை தொடர்ந்து இளைஞர் இயக்க தலைமையில் கிறிஸ்மஸ் மர விழா நடைபெற்றது.

### புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

2023 டிசம்பர் 5 மற்றும் 21 ஆகிய தேதிகளில் நோய்வாய்ப்பட்டவர்களின் இல்லங்களுக்கு சென்று பங்குதந்தையும் அருட்சகோதரிகளும் ஜெபித்து நற்கருணை வழங்கப்பட்டது.

24.12.23 அன்று மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கலை நிகழ்வுகள் மற்றும் கிறிஸ்து பிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டது.

24.12.23 இரவு கிறிஸ்துமஸ் திருப்பலியும் ஆலயம் சுற்றி பவனி, இளையோர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் கிறிஸ்துமஸ் மரவிழா போன்றவை நடைபெற்றது.



31.12.23 அன்று திருப்பலியின் போது குழந்தை இயேசு இயக்க பிள்ளைகளின் சிறப்பு காணிக்கை ஏறெடுக்கப்பட்டது. தொடர்ந்து திருப்பலிக்கு பின் அனைத்து குழந்தைகளின் தலையில் கை வைத்து சிறப்பு செபமும் நடைபெற்றது.

## நித்திரவிளை

### புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

7.12.2023 அன்று, முதல் வியாழக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர் ஜெபமாலையும் தொடர்ந்து திருப்பலி மற்றும் குணமளிக்கும் நற்கருணை ஆராதனையும் ஆடம்பர நற்கருணைப்பவனியும் நடைபெற்றது. உறவியம் வாயிலாக இவ் வழிபாடுகளில் மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

24ஆம் தேதி மறைக்கல்வி மாணவ மாணவிகளின் கிறிஸ்மஸ் விழா காலை திருப்பலிக்கு பின் நடைபெற்றது. பங்குத்தந்தை அனில்ராஜ்

அவர்கள் தலைமை தாங்கி வாழ்த்துச் செய்தி வழங்கினார். பின்னர் ஆசிரியர் வின்செண்ட் ராஜ் மற்றும் அருள் சகோதரி மேரி ராணி SD. ஆகியோர் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தி வழங்கினார்கள். அனைவரும் குழந்தை ஈசோவுக்கு காணிக்கை சமர்ப்பித்தனர். அக்கணிக்கையை நம் பங்கில் உள்ள ஒரு ஏழைக்கு உதவி மகிழ்ந்தனர். மாணவ மாணவியர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றது. இறுதியாக பாப்பரசர் கீதத்துடன் விழா நிறைவற்றது.

மாலை 6 மணிக்கு ஆலயத்தில் அமைக்கப்பட்ட கிறிஸ்துமஸ் குடில் பங்குத்தந்தை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இரவு 11 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பு வழிபாடுகளும் ஆடம்பரத் திருப்பலியும் நடைபெற்றது. இறுதியாக அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. திருப்பலி முடிந்தவுடன் இளையோர்களால் நடத்தப்படுகின்ற கிறிஸ்மஸ் மரவிழா நடைபெற்றது.

31ஆம் தேதி இரவு 11:30 நன்றி ஆராதனையும் அதனை தொடர்ந்து புத்தாண்டு சிறப்புத் திருப்பலியும் நடைபெற்றது.

### ▶ புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை

டிசம்பர் மாதம் 01 தேதி முதல் 13 ஆம் தேதி முடிய உறவியங்கள் வாயிலாக பங்குத்தந்தையோடு இணைந்து கிறிஸ்துமஸ் பஜனை நடைபெற்றது. அனைத்து மக்களும் மிகுந்த உற்சாகத்தோடு பங்கு கொண்டு வரவேற்றனர்.

டிசம்பர் 26 ஆம் தேதி அனைத்து உறவியங்களின் ஆண்டு விழா மற்றும் திருப்பலி முன்னாள் பங்கு தந்தை தாமஸ் தக்கலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உறவிய மக்கள் அனைவரும் பங்கேற்று மிகச்சிறப்பாக இவ்விழாவை சிறப்பித்தனர்.

28ஆம் தேதி மாசில்லா குழந்தைகள் திருநாள் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அனைத்து குழந்தைகளும் வெண்ணாடை



அணிந்து அணிவகுத்து வந்து குழந்தை ஈசோவை வாழ்த்தி, காணிக்கை செலுத்தி திருப்பலியில் கலந்து கொண்டனர்.

- **புனித அமல மரியா ஆலயம் – சீனிவிளை**

2023 டிசம்பர் 24 அன்று இரவு 10 மணிக்கு கிறிஸ்துமஸ் சிறப்பு திருப்பலி குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பௌவத்து பறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

31ஆம் தேதி மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனையும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

---

## கிறிஸ்துமஸ் விழா

மறைமாவட்ட வெளியீடுகளான இறையருள், தியாகச்சுடர், அருள்தூது போன்ற இதழ்களின் பொறுப்பாளர்களுக்கான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 2023 டிசம்பர் 13 அன்று தக்கலை ஆயர் இல்லத்தில் மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது. தூய ஆவி பாடலுடன் துவங்கிய இந்நிகழ்வில் திரு. ஷாஜி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். மறைமாவட்ட ஆயர் அவர்களால் இறையருள் செய்தி சேகரிப்பதன் சவால்கள் மற்றும் அதன் நிறை குறைகளை பற்றி விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து கிறிஸ்துமஸ் கேக் வெட்டி கிறிஸ்துமஸ் வாழ்த்துச்செய்தி வழங்கப்பட்டது. கிறிஸ்துபிறப்பு பாடல் பாடப்பட்டது. திரு. ராபின் ஜோசப் அவர்களால் நன்றியுரை கூறப்பட்டது. கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசு மற்றும் இரவுணவு வழங்கப்பட்டது. தலைமை பதிப்பாசிரியர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் வழிகாட்டுதலில் திரு. எட்வின்சன், திரு. ஷாஜி, திரு. ராபின் ஜோசப், மெரின் சுஜித், அருட்சகோதரி வளனரசி SDS, திருமதி சினேக லதா, திருமதி செலின் மேரி, திருமதி ஷீலா, திருமதி ஷைலா, திருமதி ராஜிதா, திருமதி சுஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.



## MONTHLY AGENDA – JANUARY 2024

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 3 | Wed | 09.00 am | **KKSSS** CTWCC Training program @ Kalluvilai |
| 4 | Thu | 09.00 am | **KKSSS :** CTWCC Training program @ Kalluvilai |
| 5 | Fri | 09.00 am | **SINAI :** One Day Retreat @ Vattakottai<br>**KKSSS:** CTWCC Training program @ Kalluvilai |
| 7 | Sun | 9.00 am | **CML :** Mission week Celebration starts |
| 8 | Mon | 10.00 am<br>2.30 pm<br>5.00 pm | Iubilaeum 2025 committee Meeting<br>Departments Meeting<br>Pastoral Council Election Commission Meeting |
| 9 | Tue | 09.00 am | **KKSSS:** SAFP cluster meeting @ Chevilai |
| 10 | Wed | 02.30 pm | Departments Meeting |
| 12 | Fri | 09.30 am | **FA :** Marriage Preparation Course @ Kalluvilai |
| 13 | Sat | 09.30 am<br>06.30 pm | **SINAI :** One Day Retreat @ Manjalummoodu and Palugal<br>**CAT :** Diocesan Bible Fest<br>**KKSSS :** CTWCC meeting with panchayat leaders @ Kulappuram<br>**FA :** Marriage Preparation Course @ Kalluvilai<br>**PULARI :** Pongal Celebration @ Border |
| 14 | Sat | | **FA :** Inauguration of Thanthayar Nalvazhvu Iyakkam |
| 15 | Mon | 10.00 am | **LITURGY** core committee meeting |
| 16 | Tue | 09.00 am | **KKSSS :** KKSSS Day celebration @ Kalluvilai |
| 19 | Fri | 05.30 pm | **SINAI :** One Day Retreat @ Palappallam |

| | | | |
|---|---|---|---|
| 24 | Wed | 09.00 am | **KKSSS:** CTWCC champions meet @ Kalluvilai |
| 25 | Thu | 09.00 am | **KKSSS :** Cancer awareness program @ Annikarai |
| 26 | Sun | 09.00 am<br>09.00 am | **CAT :** Forane Level Bible Fest For catechism Teachers<br>**CAT :** Diocesan Bible Quiz for catechism Teachers |
| 27 | Sat | 09.30 am | **SINAI :** One Day Retreat @ Retreat Center Kalluvilai |
| 26 | Thu | 1.30 pm<br>4.00 pm | **FA :** MatruJyothis Annual day @ Kalluvilai<br>**PULARI:** Save your Heart awareness program @ Border |

**Fr. Thomas Powathuparambil, Protosyncellus**

| BIRTHDAY OF REV. FATHERS - JANUARY - 2024 | |
|---|---|
| Fr. Luka Kollamparampil CMI | 17 |
| Fr. Ajin Jose | 17 |
| Fr. Toji Parampilparampil | 18 |
| Fr. Sumesh Valliyamthadathil | 18 |
| Fr. Sanil Panthichirackal | 20 |
| Fr. Jomy Kamukummattathil | 20 |
| Fr. Printo Kurias | 21 |
| Fr. Antony Chundelikkatt | 24 |
| Fr. Lijo Thekkel | 24 |
| Fr. Isaac Punnoor CMI | 25 |
| Fr. Geo Choozhikunnel | 26 |
| Fr. Jomon Mangalamadathil | 26 |

## BISHOP'S ENGAGEMENTS - JANUARY 2024

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | 10.00 am | Changancherry: Visiting benefactors |
| 2 | Tue | 09.30 am | Chethipuzha: Ordination of Dn Liju >> Angamalee: |
| 3 | Wed | 10.00 am | Angamalee >> Moolamattam >>Thuckalay |
| 4 | Wed | 09.30 am<br>06.00 pm | Marthandam: TNBC Health Commission Secretaries' meet<br>Bishop's House: Curia meeting |
| 5 | Fri | 05.00 pm | Cumbum: Visit to Angoorpalayam Mission |
| 6 | Sat | 02.00 pm | Kaliyikkavilai: Gandhian Award fuction at Nanjil College |
| 7 | Sun | 08.00 am | Kuttaicode: Feast day Holy Qurbana |
| 8-13 | Mon - Sat | | Kakkanad: Syro Malabar Bishops Synod |
| 14 | Sun | 09.30 am | Mukkoottukal: Feast day Holy Qurbana |
| 15 | Mon | 10.00 am | Bishop's House: Bible convention core committee meeting |
| 16 | Tue | 10.00 am | Sangamam: Priests' Conference |
| 17 | Wed | 10.00 am | Thuckalay: Bishop's House |
| 18 | Fri | 09.30 am | Pathukani: Marriage Holy Qurbana |
| 19 | Sun | 09.30 am<br>02.00 pm | Bishop's House: Visitors<br>Trivandrum: Teachers Farewell Meeting |
| 23 | Mon | 09.30 am<br>06.00 pm | Plankalai: CMI Institution Teachers Meeting<br>Soosaipuram: Jubilee Celebrations SABS >> Malayattoor |

| | | | |
|---|---|---|---|
| 21 | Sun | 09.30 am | Malayattoor: Marriage Holy Qurbana<br>>> Pondicherry |
| 22-23 | | 9.30 am | Pondicherry: TNBC Meeting >> Thuckalay |
| 24 | Wed | 09.30 am | Bishop's House: Curia Meeting |
| 25 | Thu | 10.00 am<br>11.30 am<br>04.00 pm | Changancherry: Marriage Holy Qurbana<br>Ithithanam: Priests' Home Silver Jubilee Celebrations<br>Kudamaloor: Marriage Reception |
| 26 | Fri | 09.00 am | Athirampuzha: Feast day Holy Qurbana |
| 27 | Sat | 09.00 am<br>03.00 pm | Thuckalay: CMC Province Community Day<br>Mukkootukal: Minor Seminary Silver Jubilee Celebrations |
| 28 | Sun | 09.30 am<br>01.30 pm | Varuthattu: First Holy Communion<br>Kalluvilai: Matrujyotis Anniversary |
| 29 | Mon | 10.00 am | Thuckalay: Bishop's House |
| 30 | Tue | 12.00 pm<br>05.00 pm | Bishop's House: Don Bosco Feast day observance<br>Palappallam: Jyothinilayam Jubilee Celebration |
| 31 | Wed | 04.30 am | >> Bangalore: CBCI meeting begins |

**Fr. Liju Mathew, Bishop's Secretary**



Pulari Social Harmony Christmas @ Tenkasi 17.12.2023



Priests' Conference and Pre-Christmas Celebration @ Sangamam 19.12.2023



Last respects to Fr. John Thekkel @ Mezhacode 23.12.2023



Migration Ministry Chennai Sangamam @ Chennai 10.12.2023



Major seminarians Christmas Celebration @ Bishop's House 23.12.2023



Christmas Holy Mass @ Karode, 25.12.2023



Kattalai Vaipu @ Thettivilai, 28.12.2023

# இதய அஞ்சலி



மண்ணில் 20.11.1934 விண்ணில் 21.12.2023

## அருட்தந்தை ஜாண் தெக்கேல்

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570